DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 164/2009 |
| Deposition of Witness for | Prosecution PW8 |
| Name | ஜெயராமன் |
| Father / Husband Name | அழகுசுந்தரம் |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 17th February 2025.

---

**(6 வது எதிரி ஆஜர்).**

**(1வது எதிரி இறந்துவிட்டார் . 2 முதல் 5 எதிரிகள் மற்றும் 7 முதல் 9 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்போது மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் நுண்கதிர் துரையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 17.02.2009 தேதி இரவு 08.30 மணியளவில் சிவகங்கை அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது மேலசேத்தூரை சார்ந்த புலிக்குட்டி என்பவரின் மகன் 60 வயது மதிக்கத்தக்க மணி என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அன்றைய தேதியில் மாலை 04.00 மணிக்கு கோரவலசையில் உள்ள ராமு

Web Copy

என்பவர் வீட்டிற்கு முன்பாக வைத்து இனம் தெரிந்த 6 நபர்கள் தன்னை வாங்கருவாள் மற்றும் கம்பு ஆகிய ஆயுதங்களால் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதிக்கும் போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது பக்க மணிக்கட்டில் வீக்கம் மற்றும் வளைந்த நிலையில் இருந்தன.

2. வலது முன்கையில் 15x 6செ.மீ அளவிலான வீக்க காயமும் அதில் சின்ன சிராய்ப்பு இருந்தது.

3. இடது முழங்கையில் 10 x 6 செ.மீ அளவிலான வீக்க காயம் .

4.இடது கட்டை விரலின் அடிப்பாகத்தில் 05 x 2x1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

5. மூக்கின் அடிப்பாகத்தில் 06 x 3 செ.மீ அளவிலானவீக்க காயம் , சின்ன சிராய்ப்பு மூக்கில் ரத்தம் வழிந்திருந்தது .

அவர் வெளிநோயாளி பகுதியில் பார்க்கப்பட்டு எலும்பு மருத்துவ பிரிவில் சிகிச்சை அளிக்குமாறு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். மேற்படி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மேற்படி நபருக்கு சிகிச்சை அளித்த எலும்பு முறிவு மருத்துவரின் கருத்துரைபடி அவருக்கு ஏற்பட்ட காயங்கள் வலது முன்கையில் ரேடியஸ் எலும்பு முறிவு, இடது முழங்கையில் Humerus எலும்பின் கீழ் பகுதி அதன்அடிப்படையில் திரு . மணி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்ற கருத்தின் அடிப்படையில் நானும் கொடுங்காயம் என சான்றிதழ் வழங்கினேன் . **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் மேற்படி தேதி நேரத்தில் பணியிலிருந்தபோது சாலியன் திடலை சேர்ந்த அய்யாக்கண்ணு என்பவரின் மகன் 50 வயது மதிக்கத்தக்க ரெங்கசாமி என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அன்றைய தேதியில் மாலை 04.00 மணிக்கு கோரவலசையில் உள்ள ராமு என்பவர் வீட்டிற்கு முன்பாக வைத்து இனம் தெரிந்த 4 நபர்கள் தன்னை வாங்கஅருவாள் மற்றும் கம்பு ஆகிய ஆயுதங்களால் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதிக்கும் போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. தலையின் வலது பக்கத்தில் 06 x 1x1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

2. வலது முன்கையில் பின்பக்கத்தில் 08x 2 x1செ.மீ அளவிலான வெட்டு காயம்.

webcopy

3. வலது சுண்டு விரலின் அடிப்பக்தில் 6 x 4 செ.மீ அளவிலான வீக்க காயம் .

4. தலையின் பின்பக்கத்தில் இடது புரத்தில் 05 x 4 செ.மீ அளவிலான வீக்க காயம் .

5. வலது முழங்கையில் 01 x 1 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் .

6. இடது மேற்கையில் 03 x 2 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் .

7. இடது காலில் 04 x 1x1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

8. இடது பக்க புட்டபகுதியில் 10 x 8 செ.மீ அளவிலான வீக்க காயம் .

9. இடது பக்க நெஞ்சின் பின் பக்கத்தில் கோடு போன்ற சிராய்ப்பு காயம் .

அவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் . பின்னர் அவரது சம்மதத்துடன் விடுவிக்கப்பட்டு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மேற்படி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மேற்படி நபருக்கு சிகிச்சை அளித்த எலும்பு முறிவு மருத்துவரின் கருத்துரைபடி அவருக்கு ஏற்பட்ட காயங்கள் வலது சுண்டு விரலில் Proximai Phalanx எலும்பு முறிவு, அதன்அடிப்படையில் திரு . ரெங்கசாமி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்ற கருத்தின் அடிப்படையில் நானும் கொடுங்காயம் என சான்றிதழ் வழங்கினேன் . **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் மேற்படி தேதி இரவு 08.45 மணியளவில் பணியிலிருந்தபோது கோரவலசை சேர்ந்த கண்ணையா என்பவரின் மகன் 45 வயது மதிக்கத்தக்க சுப்பிரமணி என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அன்றைய தேதியில் மாலை 04.00 மணிக்கு கோரவலசையில் உள்ள ராமு என்பவர் வீட்டிற்கு முன்பாக வைத்து இனம் தெரிந்த 3 நபர்கள் தன்னை வாங்கருவாள் மற்றும் கம்பு ஆகிய ஆயுதங்களால் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதிக்கும் போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது முன் கையில் கீழ் பகுதியில் வீக்கமும் வளைந்த நிலையில் இருந்தது. 02 x 1 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் .

2. வலது காதில் 02 x 1 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம்.

அவர் வெளிநோயாளி பகுதியில் பார்க்கப்பட்டு எலும்பு மருத்துவ பிரிவில் சிகிச்சை அளிக்குமாறு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். மேற்படி

மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மேற்படி நபருக்கு சிகிச்சை அளித்த எலும்பு முறிவு மருத்துவரின் கருத்துரைபடி அவருக்கு ஏற்பட்ட காயங்கள் வலது முன்கையில் 2 எலும்புகளிலும் எலும்பு முறிவு, அதன்அடிப்படையில் திரு . சுப்பிரமணி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்ற கருத்தின் அடிப்படையில் நானும் கொடுங்காயம் என சான்றிதழ் வழங்கினேன் . **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் மேற்படி தேதி இரவு 09.15 மணியளவில் பணியிலிருந்தபோது மேலசேத்துார் கிராமத்தை சேர்ந்த புலிக்குட்டி என்பவரின் மகன் 59 வயது மதிக்கத்தக்க அழகர்சாமி என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அன்றைய தேதியில் மாலை 04.00 மணிக்கு கோரவலசையில் உள்ள ராமு என்பவர் வீட்டிற்கு முன்பாக வைத்து இனம் தெரிந்த 2 நபர்கள் தன்னை தடிக் கம்பு என்ற ஆயுதத்தால் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதிக்கும் போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. தலையின் இடது பக்கத்தில் 10 x 2 x 2செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

2. வலது முழங்கையில் 02 x 1 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம்.

3. வலது முழங்கையில் 04 x 3 செ.மீ அளவிலான வீக்க காயம்.

4. வலது தோள்பட்டையின் பின்பக்கத்தில் 06 x 3 செ.மீ அளவிலான வீக்க காயம்.

அவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு பின்னர் 23.02.2009 அன்று விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் மேற்படி தேதி இரவு 09.30 மணியளவில் பணியிலிருந்தபோது கோரவலசை கிராமத்தை சேர்ந்த கண்ணையா என்பவரின் மகன் 50 வயது மதிக்கத்தக்க ராமு என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அன்றைய தேதியில் மாலை 04.00 மணிக்கு கோரவலசையில் உள்ள ராமு என்பவர் வீட்டிற்கு முன்பாக வைத்து இனம் தெரிந்த 5 நபர்கள் தன்னை வாங்கருவாள் , கம்பு என்ற ஆயுதங்களுடன் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதிக்கும் போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. தலையின் இடது பக்கத்தில் 02 x 1 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

webcopy

2. தலையின் வலது பக்கத்தில் 04 x 2 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம்.

3. இடது முன் கையில் 04 x 1 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

4.இடது தொடையில் 10 x 5 செ.மீ அளவிலான வீக்க காயம்.

5.தலையின் இடது பக்கத்தில் காதுக்கு அருகில் 05 x 4 செ.மீ அளவிலான வீக்க காயம் மற்றும் சிறிய சிராய்ப்பு காயம் .

6. இடது பக்க நெஞ்சின் பின்பகுதியில் 05x 4 செ.மீ அளவிலான வீக்க காயம் .

7. இடது கட்டவிரலில் வலி இருப்பதாக கூறினார்.

அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். இடது கையின் நுண் கதிர் படம் எடுத்ததில் கட்டைவிரல்Base of Proximai Phalanx எலும்பு முறிவு இருந்தது. பின்னர் 26.02.2009 அன்று விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் மேற்படி தேதி இரவு 10.00 மணியளவில் பணியிலிருந்தபோது கோரவலசை கிராமத்தை சேர்ந்த ராமு என்பவரின் மகள் 14 வயது மதிக்கத்தக்க மாதவி என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அன்றைய தேதியில் மாலை 04.00 மணிக்கு கோரவலசையில் உள்ள ராமு என்பவர் வீட்டிற்கு முன்பாக வைத்து இனம் தெரிந்த 10 நபர்கள் தன்னை அருவாள் , கம்பு என்ற ஆயுதங்களுடன் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதிக்கும் போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. தலையின் வலது பக்கத்தில் 06 x 2 x 2 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

2. இடது சுண்டுவிரலில் 03 x 2 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம்.

அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். இடது கையின் நுண் கதிர் படம் எடுத்ததில் எலும்பு முறிவு எதுவும் இல்லை . அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் மேற்படி தேதி இரவு 10.30 மணியளவில் பணியிலிருந்தபோது கோரவலசை கிராமத்தை சேர்ந்த சுப்பிரமணி என்பவரின் மனைவி 38 வயது மதிக்கத்தக்க பொன்னாத்தாள் என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர்

WebCopy

தன்னை அன்றைய தேதியில் மாலை 04.00 மணிக்கு கோரவலசையில் உள்ள ராமு என்பவர் வீட்டிற்கு முன்பாக வைத்து இனம் தெரிந்த 3 நபர்கள் தன்னை வாங்கருவாள் , கம்பு என்ற ஆயுதங்களுடன் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதிக்கும் போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது மணிக்கட்டில் 02 x 1 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

2. முதுகில் வலி இருப்பதாக கூறினார்.

அவர் வெளி நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் மேற்படி தேதி இரவு 10.40 மணியளவில் பணியிலிருந்தபோது கோரவலசை கிராமத்தை சேர்ந்த ராமு என்பவரின் மனைவி 40 வயது மதிக்கத்ததக்க பூரணம் என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அன்றைய தேதியில் மாலை 04.00 மணிக்கு கோரவலசையில் உள்ள ராமு என்பவர் வீட்டிற்கு முன்பாக வைத்து இனம் தெரிந்த 2 நபர்கள் தன்னை வாங்கருவாள் , கம்பு என்ற ஆயுதங்களுடன் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதிக்கும் போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது கையில் 04 x 1 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

2. இடது முன்கையின் பின்புறத்தில் 06x 2 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

3. நெற்றியின் வலது பக்கத்தில் 02x 1 x 1 செ.மீ அளவிலான சிதைந்த காயம் .

அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். வலது கை மற்றும் இடது முன் கை நுண் கதிர் படம் எடுத்ததில் எலும்பு முறிவு எதுவும் இல்லை . அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் .

**<u>2 முதல் 9 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் மேற்படி நபர்களுக்கு அதே தேதி, சமயத்தில் மீனாட்சி சுந்தரம், பூசைத்துரை , மற்றும் காந்தி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்தேன் என்றால் சரிதான். அதில் பூசைத்துரைக்கு கொடுங்காயம் மற்ற இருவருக்கும் சாதாரண காயம்

Web copy

என சான்று வழங்கிஉள்ளேன் என்றால் சரிதான் . மேற்படி பூசைத்துரை தன்னை 15 நபர்கள் தாக்கியதாக கூறி உள்ளார் என்றால் சரிதான்.

2) நான் சிகிச்சையளித்த நபர்கள் தங்களை 2 மற்றும் 4 நபர்கள் தாக்கியதாக மாற்றி , மாற்றி கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். 1 முதல் 8 வரையிலான காயம் பட்ட நபர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் டாடா ஏசி வண்டி விரைவாக வளையும்போது வாகனம் கவிழும் போது கீழே விழுந்து இது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம்**, B.Sc., B.L., 17.02.2025,
நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

Web Copy